27

# சிங்களத்து மருத்துவிச்சி

அலிஸ் நோனா பயத்தினால் நடுங்கினாள். நான் அவளை மிகக் கடுமையாக ஏசிவிட்டேன். அவள் செய்தது எனக்கு அப்போது மன்னிக்க முடியாத ஒரு குற்றமாகவே தோன்றிற்று.

அவள் எனது ஆஸ்பத்திரியில் மருத்துவிச்சி, வயது நாற்பதுக்கு மேலிருக்கும். அவளை நேரில் பார்த்தவர்கள், அவள் இப்படியான ஒரு அசம்பாவிதமான தவறைச் செய்வாள் என்று எதிர்பார்க்க மாட்டார்கள். அத்தனை அனுபவம் அவள் முகத்தில் தெரியும்.

அலிஸுக்கும் எனக்கும் இடையே இருந்த பிரசவக்கட்டிலில், இருபது வயது நிரம்பாத மங்கையான பொடிமெனிக்கா புரண்டு உருண்டு வேதனையால் துடித்துக் கொண்டிருந்தாள். அது அவள் தலைப்பிள்ளை. பிரசவ வலி தொடங்கி இரண்டு நாட்களாகியும் இன்னும் குழந்தை பிறக்கவில்லை. அவளது நாடி கொஞ்சம் வேகமாகவே அடித்தது. வயிற்றறையிலே கருப்பை மிகக் கடுமையாகச் சுருங்கி விரிவது தெரிந்தது. குழந்தையின் இருதயத் துடிப்பை என்னால் கேட்க முடியவில்லை.

"குழந்தையைக் கொன்றுவிட்டாய் போலிருக்கிறது" என்று அலிஸ் நோனாவிடம் சிங்களத்தில் முணுமுணுத்தேன்.

"இல்லை மஹத்மயா, சற்று முன்னம் தான் கேட்டேன்; சிசுவின் இருதய ஒலி ஒழுங்காக இருக்கிறது" என்றாள்.

அவள் சொன்னது உண்மையாக இருக்கலாம். அனுபவத்தால் பயிற்சி பெற்ற அவள் காதுகளுக்கு குழந்தையின் சிறிய இருதயத்தின் துடிப்பு கேட்டிருக்கலாம். எனினும் குழந்தை உயிருடன் பிறக்கும் என நான் நம்பவில்லை. பொடிமெனிக்காவைப்பற்றிக் கொஞ்சம் முன்னதாகவே அலிஸ் தெரிவித்திருந்தால் நான் ஆயுதம் உபயோகித்து, குழந்தையைப் பிறப்பித்திருப்பேன். இப்போது மயக்க மருந்தைக் கொடுக்கக் கூட யோசிக்க வேண்டியிருக்கிறது.

"அலிஸ்"

"மஹத்மயா?"

"உனக்கு இந்தக் கேஸ் சிக்கலானதாகத் தோன்றவில்லையா?"

மௌனமாயிருந்தாள் அவள்.

“நீ நேரத்துடனேயே என்னை அழைக்காதது பெரிய குற்றம்”

அலிஸ் தரையை நோக்கி கால் பெருவிரலால் அர்த்தமில்லாத கோடுகளைக் கீறிக்கொண்டிருந்தாள். அவள் கண்கள் குளமென நிரம்பியிருந்தன.

டாக்டர்களும் எமனும் பரம விரோதிகள். சில வேளைகளில் இருவருக்குமிடையே சண்டை சமமாக இருக்கும். அந்த வேளைகளிலேதான் விதி தன் திருவிளையாடலைச் செய்கிறது. ஆனால் படித்து அனுபவம் பெற்ற மருத்துவிச்சியே தனது மதியை இழப்பாளேயானால் டாக்டரின் கதிதான் என்ன? எமன் அந்தப் பிரசவ அறையில் எங்கேயோ பாசக்கயிற்றுடன் நின்று என்னைப் பார்த்து அவமதிப்பாகச் சிரிப்பது போல் இருந்தது.

சுத்தமான ஒரு கோட்டையும் குல்லாயையும் முகமூடியையும் அணிந்து கொண்டு கைகளைப் பல தடவை சோப்புப் போட்டுக் கழுவினேன். அலிஸ் நோனா பணிவுடன் தந்த துவாலைகளில் கைகளைத் துடைத்துவிட்டுத் தோல் உறைகளைக் கைகளில் மாட்டிக் கொண்டேன். நோயாளியை நுணுக்கமாகப் பரீட்சித்தேன். அவளுடைய இடுப்பு எலும்புக்கூட்டின் வாசல் ஒழுங்காக இருந்தது. பன்னீர்க் குடம் உடைந்திருந்தது. ஆனால் குழந்தையின் தலை சற்றுப் பெரிதாகவும் ஒரு பக்கத்துக்குச் சரிவாகவும் இருந்தது. கண்டிப்பாக ஆயுதம் பாவிக்க வேண்டிய ஒரு கேஸ்தான்.

பொடிமெனிக்கா துடியாய்த் துடித்தாள். போர்வையை அகற்றி, தலையை நிமிர்த்தி கால்களை மடக்கி முக்கினாள். புரண்டாள். பின்பு பாரமான வேலையைச் செய்தவள் போல் தலையணையில் சாய்ந்து, மூச்சை மேலும் கீழும் ஓசையுடன் விட்டாள்.

தூக்க மருந்து ஒன்றை ஊசி மூலம் ஏற்றினேன். சிறிது நேரத்தில் அவளுடைய போராட்டம் அடங்கி சிறிது அமைதியாகப் படுத்திருந்தாள். ஆனால் அந்த அமைதி எனது மனநிலையை இன்னும் அதிகமாகக் கலக்கியது.

இப்படிக் குழப்பமான நேரங்களில் டாக்டர் தனது புத்தியையும் மனத்துணிவையும் இழக்காது தனது வேலையைச் செய்ய வேண்டும் என்று எனது வைத்திய ஆசிரியர்கள் சொல்லித் தந்திருக்கிறார்கள். அத்துடன் டாக்டர் தொழில் எனது குடும்பத்துக்குப் புதிதல்ல. எனது தகப்பனார் அரசாங்க டாக்டராக இலங்கையில் பல வைத்தியசாலைகளில் வேலை செய்து ஓய்வு எடுத்துக் கொண்டவர். வைத்தியப்புலி என்று யாழ்ப்பாணத்தில் பெயர் வாங்கியவர். அப்படிப்பட்ட ஒரு பிரபல டாக்டரின் மகனான நான் இந்தச் சிறு பிரசவ அறையில் பூனையாக நின்றதற்குக் காரணம் உண்டு.

அன்று நான் டாக்டர் தொழில் பார்க்கும் முதல் நாள். பொடிமெனிக்காவுக்கு அதுதலைப்பிள்ளை. அதே போல டாக்டர் பட்டம் பெற்ற பின்பு நான் என் கைகளினால் பிரசவம் பார்க்கும் முதல் கேஸ் இது.

அலிஸ் நோனா பொடி மெனிக்காவின் முகத்திலே பூத்திருந்த வியர்வை முத்துக்களைத் துடைத்தாள். நோயாளி பாதிக்கண் திறந்து என்னையும் அலிஸையும் கெஞ்சும் பாவனையில் பார்த்துத் தன் வயிற்றை இலேசாகத் தடவிக்கொண்டாள். “பயவெண்ட எப்பா லமயா ஹம்புவே” என்று பொடிமெனிக்காவைத் தைரியப்படுத்தினாள் அலிஸ். தைரியம் நோயாளிக்கல்ல மறைமுகமாக எனக்குத் தான் என்று தோன்றியது. ‘பயம் வேண்டாம், குழந்தை பிறக்கும், என்று சிங்களத்தில்

பொடிமெனிக்காவுக்குச் சொல்வது போல் எனக்குத்தான் சொல்கிறாளோ! தேவையான ஆயுதங்களைக் கண்ணாடி அலமாரியில் இருந்து எடுத்து அவளிடம் கொடுத்தேன். அவற்றை நீரில் நன்கு கொதிக்க வைத்துவிட்டு என்னை வந்து அழைக்கும்படி உத்தரவிட்டபின், வைத்தியசாலைக்குப் பக்கத்தில் இருந்த என் பங்களாவுக்குப் போய்விட்டேன்.

'ஹரக்பிட்டியா அரசாங்க வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரி' என்பதுதான் எனது பதவிக்குத் தரப்பட்ட சரியான பெயர். ஹரக்பிட்டியா ஒரு சிறிய கிராமம். மலையும் முகிலும், வயலும் வாய்க்காலும், குளமும் கமலமும் அங்கே கொஞ்சிக்குலவின குடிமக்கள் நூற்றுக்கு நூறு சிங்களவர்கள். அனைவருக்கும் அந்த வைத்தியசாலையின் டாக்டரிடம் - அதாவது எனக்கு முன் இருந்தவரிடம் - நல்ல நம்பிக்கை உண்டு.

பொடிமெனிக்கா இன்று எனது பராமரிப்பில் இருந்தாள். அறியாமையினாலோ ஊக்கக் குறைவினாலோ அலிஸ் செய்த பிழை கிராமத்துக்குத் தெரிந்திருந்தால்....? வந்ததும் வராததுமாக முதல் நாளிலேயே, நான் கிராமமக்களின் வெறுப்பை வீணிலே அடைந்து விடுவேனோ!...

அலிஸ் நோனாவை எப்படியும் கண்டித்துத்தான் ஆகவேண்டும். தலைமை அதிகாரி என்ற முறையில் அது என் கடமை. உத்தியோகபூர்வமாக அவளுக்கு எழுதத் தொடங்கினேன் - காலையில் கொடுக்கலாம் என்று.

'...பொடிமெனிக்காவுக்குப் பிரசவ வேதனை உண்டாகி இரண்டு நாட்கள் சென்றும் குழந்தை பிறக்கவில்லை. அது அவள் தலைப்பிள்ளை. சில மணி நேரம் முன்னதாக நீ எனக்கு அறிவித்திருந்தால்...'

அலிஸ் வாசலில் வந்து நின்றாள்.

"என்ன எல்லாம் தயாரா?" என்று உறுமினேன்.

அலிஸ் நோனாவின் முகமோ வெண்ணிலவைப் போல் குளிர்ச்சியாக இருந்தது. "லமயா ஹம்பவுனா" என்றாள்.

ஆம். குழந்தை பிறந்து விட்டது! கடவுள் என்னைக் காப்பாற்றிவிட்டார்!

"பயவெண்ட எப்பா, லமயா ஹம்புவே" அலிஸ் நோனாவின் தீர்க்கதரிசனத்தை மீண்டும் ஒரு முறை யோசித்து மனதுக்குள் ஆராய்ந்தேன். அனுபவ அறிவைக் கொண்டுதான் அவ்வளவு உறுதியுடனும் துணிச்சலுடனும் சொன்னாளா? ஆமாம் அவள், சென்ற இருபத்தைந்து வருடங்களில் பல இடங்களில் வேலை பார்த்திருப்பாள். இப்படியான பிரசவ விடுதிகளில் மாதத்திற்கு குறையாமல் இருபது குழந்தைகள் பிறக்கும். வருடத்திற்கு இருநூற்றைம்பது குழந்தைகள், தங்கள் முதல் மூச்சை இழுத்து முதல் குரலைக் காட்டும் போது அலிஸ் தனது இரு கைகளாலும் ஏந்தியிருப்பாள். எனக்கோ இதுதான் முதல் கேஸ்.

இருக்கட்டுமே? அதனால் என்ன? அனுபவமே போதுமானால் அலிஸ் நோனாவே இந்த வைத்தியசாலைக்கு அதிகாரியாக இருந்திருக்கலாமே! இல்லை. முதல் கேஸானாலும் நான் டாக்டர்! ஆறாயிரம் கேஸ்களுக்குப்பின்பும் அவள் மருத்துவச்சிதான்! இந்தக் கேஸ் பிழைத்து விட்டதற்காக



இலவச விநியோகத்திற்காக

அலிஸைக் கண்டிக்காமல் விடக்கூடாது. மிகுதிப்பகுதியையும் எழுதினேன்.

'...உனது தாமதத்தினால் குழந்தை பல மணி நேரம் சென்ற பின்பே பிறந்தது. இதனால் தாய் சொல்லொணா வேதனை அடைந்துவிட்டாள். தாயின் உயிருக்கும், முக்கியமாக சிசுவின் உயிருக்கும் இதனால் ஆபத்து நேரிடக்கூடிய நிலையை நீ உண்டாக்கி விட்டாய். இக்குற்றத்திற்காக ஏன் உனக்கு அபராதம் விதிக்கக் கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை எனக்கு நீ மூன்று நாட்களுக்குள் எழுத்து மூலம் காட்டவேண்டும்...'

அலிஸ், என்னையோ, நான் கடிதம் எழுதுவதையோ கவனிக்கவில்லை. அவள் கவனத்தைக் கவர்ந்த பொருள், சுவரிலே தொங்கிய ஒரு பழைய புகைப்படம்தான். அதில் ஒரு கணவன் மனைவி இருந்தார்கள். மனைவியின் மடியிலே ஒரு குழந்தை இருந்தது.

"மஹத்மயா, இந்தப் போட்டோ உங்களிடம் எப்படி வந்தது? என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டு கேட்டாள் அலிஸ்.

"உனக்கு இவர்களைத் தெரியுமா?" என்று நான் திருப்பிக்கேட்டேன்.

"தெரியாமலென்ன மஹத்மயா? இருபத்தைந்து வருடங்களுக்கு முன் நான் மருத்துவப் பரீட்சையில் வெற்றிபெற்று மருத்துவச்சியானதும் என்னை ஒரு சிறு வைத்தியசாலைக்குத்தான் அனுப்பினார்கள். இதோ போட்டோவில் இருக்கும் மஹத்மயாதான் பிரதான வைத்தியராக இருந்தார். எனக்குப்பிரசவம் பார்க்கும் நுட்பங்களைக் கற்பித்த குரு அவர்தான். அவர் அருகில் இருக்கும் அம்மையாரும் என்னிடம் எவ்வளவோ அன்பாகப் பழகினார். வேறு ஒரு பெரிய வைத்தியசாலைக்குப் போகுமுன் இதே மாதிரிப் படமொன்றை எனக்கும் தந்தார்கள். என் வீட்டிலே இன்றைக்கும் மாட்டி வைத்திருக்கிறேன்" என்றாள் அலிஸ். அவள் குரல் தழுதழுத்தது. கண்களின் முனையில் நீர் பளபளத்துக் கொண்டிருந்தது.

நான் வியப்புடன் பேசினேன்.

"இதெல்லாம் நிஜம்தானா அலிஸ்? இவரிடம் அனுபவம் பெற்ற மருத்துவச்சியா நீ?"

"ஆம் மஹத்மயா, இவர் என்மேல் வைத்திருந்த நம்பிக்கை கொஞ்சநஞ்சமல்ல. தனது மனைவியின் முதல் பிரசவத்தைக் கூட என் கண்காணிப்பிலே தான் வைத்திருக்க விரும்பினார். அப்படியேதான் செய்தார். நான் என் கைகளாலே இந்த அம்மையாரின் குழந்தையைப் பிறப்பித்தேன். அதோ அவர்கள் மடியில் இருக்கிறதே..."

அலிஸ் சொல்லி முடிக்குமுன் நான் நாற்காலியில் இருந்து எழுந்து விட்டேன்.

"அலிஸ், இவர்கள் என் பெற்றோர்கள்! நான் தான் அந்தக்குழந்தை!" என்று என்னை அறியாமலே கதறி விட்டேன்.

அலிஸ் என்னை அணைப்பதற்குத் தயாராக நின்றாள்.

அலிஸுக்காக எழுதி வைத்திருந்த எச்சரிக்கைக் கடிதத்தை என் கைகள் ரகசியமாகக் கசக்கிக் கொண்டிருந்தன.

*-'நந்தியின் கதைகள்' -*



இலவச விநியோகத்திற்காக